# ‘சத்ய சாய் சேவா’ சார்பில் மாதிரி போட்டி தேர்வு

சென்னை, பிப். 17–
பள்ளி தேர்வில், மாணவர்கள்கூடுதல்மதிப்பெண் பெறுவதற்கு ஊக்குவிக்கும் நோக்கில், ‘சத்ய சாய் சேவா’ அமைப்பின் சார்பில், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், மாதிரி போட்டி தேர்வு, நேற்று நடத்தப்பட்டது.

சென்னை, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், 9, 10ம் வகுப்பு, பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2, தமிழ் மற்றும் ஆங்கில வழி கல்வி பயிலும் மாணவ – மாணவியர், பொது தேர்வில் அதிக மதிப்பெண் எடுப்பதற்கு வழி காட்டும் நோக்கில், சத்ய சாய் சேவா அமைப்பு, மெட்ரோ நிறுவனத்துடன் இணைந்து, மாதிரி போட்டி தேர்வு, நேற்று நடத்தியது.

காலை, 10:30 மணியில் இருந்து, 12:30 மணி வரை, இத்தேர்வு நடந்தது.

இதில், சென்னையில் உள்ள, 100 பள்ளிகளைச் சேர்ந்த, 1,300 மாணவ – மாணவியர் மாதிரி தேர்வு எழுதும் போட்டியில் பங்கேற்றனர்.

சத்ய சாய் சேவா அமைப்பின், சென்னை மாவட்ட தலைவர் சந்திரசேகர், சென்னை வடக்கு மாவட்ட தலைவர் தேவானந்தன், ஒருங்கிணைப்பாளர் கே.எஸ்.சத்தியநாராயணன், சத்திய சாய் அறக்கட்டளை உறுப்பினர் ரமேஷ் ஆகியோர், தேர்வுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

சத்ய சாய் சேவா அமைப்பின், 250 தொண்டர்கள், மாணவ – மாணவியருக்கு சேவையாற்றினர். குடிநீர், பேனா, பிஸ்கட் பாக்கெட் இலவசமாக வழங்கப்பட்டன.



■ ‘சத்ய சாய் சேவா’ அமைப்பு, மெட்ரோ ரயில் நிறுவனம் இணைந்து, பள்ளி மாணவர்களுக்கு, சென்னை, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில், நேற்று மாதிரி போட்டி தேர்வை நடத்தின. இதில், மாணவ – மாணவியர் பங்கேற்று தேர்வு எழுதினர்.

தேர்வு எழுத வந்திருந்த மாணவ – மாணவியரின் பெற்றோருக்கு, குழந்தைகள் தேர்வுகளை சிறப்பாக எழுதுவதற்கு, வீட்டில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து, ஆலோசனையும் வழங்கப்பட்டது.

சத்ய சாய் சேவா அமைப்பின், சென்னை மாவட்ட தலைவர் சந்திரசேகர், வடக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சத்தியநாராயணன் ஆகியோர் கூறியதாவது:

மாணவர்கள் பதற்றமின்றியும், எளிதாகவும் தேர்வு எழுத வழிகாட்டுதல் வழங்கும் நோக்கில், இந்த மாதிரி போட்டி தேர்வு நடத்தப்பட்டது.

மாணவ – மாணவியர், மாதிரி வினாக்களை தொகுத்து, வீட்டில் தேர்வு எழுதி பழகினால் தேர்வில், பதற்றமின்றி, அனைத்து வினாக்களுக்கும் உரிய நேரத்துக்குள் விடையளிக்க முடியும்.

பதில்களை வேகமாகவும், முழுமையாகவும் உரிய நேரத்திற்குள் எழுதி, அதிக மதிப்பெண் பெற முடியும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.